27—

மாசு கட்டுப்பாடு அலுவலகம்

***95948—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவாரூரில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், 1997 ஆம் ஆண்டு, நீதிக் கட்சி பிதாமகர்களில் ஒருவரான Sir A.T. பன்னீர்செல்வம் அவர்களின் பெயரில் திருவாரூர் மாவட்டம் தனி வருவாய் மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, சற்றேறக்குறைய 27 ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில் அந்த மாவட்டத்திற்கு, ‘அகத் தூய்மை வாய்மைக்கு; புறத் தூய்மை வாழ்வுக்கு’ என்ற மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வைர வரிகளுக்கு வலுவூட்டும் விதமாக இந்தத் துறை சார்ந்த கட்டடத்தை அமைத்துக் கொடுக்க இசைவு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 15]

முற்பகல் 10–50

தமிழகத்தில் நெகிழியை ஒழிக்க வேண்டும்; தமிழகத்தை நெகிழியில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை அறிமுகப்படுத்திய எங்கள் தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்தத் தருணத்தில் தெரிவித்து, புதிதாக அமைக்கப்படவுள்ள மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகம் என்பது முழு தேவைகளையும் பூர்த்தி செய்யும்விதமாக— ஏனெனில், கடல் அருகில் உள்ள மாவட்டம் என்பதால் காலநிலை மாற்றங்களால் அதிக பாதிப்புகள் ஏற்படும் மாவட்டம் என்பதை உணர்ந்து, அனைத்து தேவைகளும் அந்த அலுவலகத்தில்— அமையும்படி செய்துதர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த மண்ணில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளபடி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் அமைக்கின்றபொழுது, அந்தப் பகுதியில் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உடனுக்குடன் அறிந்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அந்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய நவீன தொழில்நுட்பத்தோடு அந்த அலுவலகம் அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழலில் மாசு கட்டுப்பாடு என்பதற்கு மரம் முக்கியத்துவம் வாய்ந்தது. மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும் என்ற மண்ணின்*

மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வைர வரிகளைப் போற்றும்விதமாக, திருவாரூர் மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளில் மரங்களைப் பெருமளவில் வளர்க்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல், திருவாரூர் மாவட்டத்தில் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தில் மிகப் பெரிய அளவில் இடம் உள்ளது. பொதுநல ஆர்வலர்களாலும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களாலும் அந்த இடத்திலுள்ள காட்டுக்கருவை மரங்கள் அகற்றப்பட்டு, இப்பொழுது நல்ல நிலையில் உள்ள அந்தப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மரங்களை நடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்து, அந்தப் பகுதியில், மேலும் பள்ளி, கல்லூரிகளில் மரங்களை வளர்ப்பதற்கு, மரங்களை நடவு செய்து மேம்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் உலகத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் திருவாரூர் வந்து உயர் கல்வி படிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய பல்கலைக்கழகத்தை திருவாரூரில் அமைத்தார்கள். அந்த அடிப்படையில், கொரோனா பெருந்தொற்று காலத்தில் அந்தப் பல்கலைக்கழகத்தை நேரடியாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு ஆய்வு மேற்கொண்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற கருவேல மரங்களை அகற்றி, கிட்டத்தட்ட 75 இலட்ச ரூபாய் மதிப்பில் CSR நிதியின் மூலமாக மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல, நமது பள்ளி, கல்லூரிகளில் மரங்களை நடவு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பசுமைப் பள்ளி என்கின்ற மகத்தான திட்டத்தை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை மாணவப் பருவத்திலேயே உணர்கின்ற வகையில்—ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.20

2024 பிப்ரவரி 15]

இலட்சம் மதிப்பில் அந்தப் பள்ளிக்குத் தேவையான மின்சாரத்தை solar மூலமாகப் பெறுவது, பள்ளி வளாகம் முழுவதும் மரங்களை நடவு செய்வது, மூலிகைத் தோட்டம், காய்கறித் தோட்டம் அமைப்பது, பிளாஸ்டிக் இல்லாத வளாகமாக மாற்றுவது, மழைநீர் சேகரிப்பு, காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய விழிப்புணர்வு இப்படி அத்தனை அமைப்புகளோடும்—ஒரு முன்மாதிரித் திட்டத்தை 2022–2023–ல் 25 பள்ளிகளுக்கு ரூ.5 கோடி மதிப்பில் நிறைவேற்றினோம். இந்த ஆண்டு ரூ.10 கோடி மதிப்பில், அந்தத் திட்டத்தை கிட்டத்தட்ட 50 பள்ளிகளில் நிறைவேற்றயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பசுமைத் தமிழகம் திட்டம் என்கின்ற மகத்தான திட்டத்தை அறிவித்து, ஆண்டுக்கு 10 கோடி மரங்களை நடவு செய்கின்ற பணிகளை மேற்கொண்டிருக்கிற அந்த வகையில், வருகின்ற நிதியாண்டில் திருவாரூர் மாவட்டத்தில் இருக்கின்ற பள்ளி, கல்லூரிகளுக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து பள்ளி, கல்லூரிகளிலும் மரங்கள் நடவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

பால் குளிரூட்டும் நிலையம்

***52524—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடவாசலை தலைமையிடமாகக் கொண்டு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?